SINCE 1997
பிப்ரவரி 2025
விலை ரூ.30/-

# லேடீஸ் ஸ்பெஷல்

பெண்கள் மாத இதழ்

புறப்படு பெண்ணே! புவியசைக்க...

சாதிக்கத் துடிக்கும் சகோதரிகளுக்கான ஒரே பெண்கள் மாத இதழ்

ஆசிரியர் கிரிஜா ராகவன்





## பாராட்ட வேண்டிய பாரதி படம்



## பட்டுக் குழந்தைகளின் சபாஷ் அம்மா

- அன்னையின் பெயரில் இலக்கிய விருதுகள்...
- தள்ளிப் போகும் மாதவிடாய் (PCOD)

மேலும் ஏராளமான செய்திகள்...




இதழுடன் இணைப்பு
(16 பக்கங்கள்)

# மெட்டாவெர்ஸ் எனும் Ai உலகம்!

நான் ஏற்கெனவே சொல்லி இருப்பதைப் போல் ஒரு இயந்திரத்துக்கு கணிதம் மூலமாக லாஜிக் உருவாக்கி அதனுள் இன்புட்டாக உள்ளீடு செய்து அதன் மூலம் இயந்திரத்துக்குக் கற்றுக்கொடுத்து அதை செயல்பட வைப்பதே Ai தொழில்நுட்பத்தின் தொடக்கம்தான். இது நம் நாட்டில் 1990–களிலேயே ஆரம்பமாகி விட்டது எனலாம். கம்ப்யூட்டர் இயங்குவதே Ai தொழில் நுட்பத்தினால்தான் என்றால் நம்ப முடிகிறதா? இயந்திரத்துக்கு நுண்ணறிவு கிடையாது. அதனை செயற்கை நுண்ணறிவின் மூலம் இயங்கச் செய்யும் தொழில்நுட்பம்தான் Ai.

அப்படிப் பார்த்தால் நாம் பயன்படுத்தும் வாஷிங் மிஷின், தண்ணீர் தொட்டியில் தண்ணீர் நிரம்பியதும் தானாகவே நிற்கும் மோட்டர் இப்படி வீடுகளில் நாம் பயன்படுத்தி வரும் பல சாதனங்கள் செயற்கை நுண்ணறிவினால்தான் இயங்குகின்றன. ஆனால் அதற்கெல்லாம் நாம் Ai என பெயர் சூட்டவில்லை. அதனால் Ai தொழில்நுட்பம் பெரிதாக பேசப்படவில்லை.

இப்படி மெல்லிய புள்ளியாக இருந்த Ai தொழில்நுட்பம் இன்று விஸ்பரூப வளர்ச்சி எடுத்து Ai என்ற தன் வட்டத்துக்கும் மேலே உயர உயர சென்று வேறொரு உலகில் பறக்க ஆரம்பித்துவிட்டது. அந்த உலகத்தின் பெயர் ‘மெட்டாவெர்ஸ்’. இதுவும் Ai தொழில்நுட்பத்தினால் இயங்கக் கூடியதே. இன்னும் இந்தத் தொழில்நுட்பம் குறித்து பொதுமக்களுக்கு பெரிதாக புரிதல் ஏற்படவில்லை என்றாலும், இதுவும் நம்மை ஆளப் போகும் காலம் வெகு தொலைவில் இல்லை.



மெட்டாவெர்ஸ் – நம் கண்களை நம்ப வைத்து அதன் மூலம் மூளையை இயங்கச் செய்கிறது. கூடவே காதுகள்



காம்கேர் கே. புவனேஸ்வரி
Email: compcare@hotmail.com | WhatsApp: 9444949921

மூலம் சப்தங்களையும், மூக்கின் மூலம் நறுமணங்களையும் உணரச் செய்து மனிதனை மாயாஜால உலகத்தை அறிமுகம் செய்கிறது.

நிஜத்தில் என்னவெல்லாம் செய்கிறோமோ அவற்றை எல்லாம் அங்கு செய்து மகிழலாம். இன்னும் சொல்லப் போனால் நிஜத்தில் சாத்தியமில்லாதவற்றைக் கூட அங்கு அரங்கேற்றிக் கொள்ளலாம். உதாரணத்துக்கு இறந்துபோன நம் உறவினர்களை காண வேண்டும் என நினைத்தால் அதற்கும் அங்கு சாத்தியக் கூறுகள் உண்டு.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நிஜ உலகம் போலவே இன்டர்நெட்டில் இயங்கும் உலகத்துக்கு மெட்டாவெர்ஸ் (MetaVerse) என்று பெயர். ஏற்கெனவே இன்டர்நெட் உலகத்தை வெர்ச்சுவல் / டிஜிட்டல் உலகம் என்றுதானே அழைக்கிறோம். அதில் இருந்து மெட்டாவெர்ஸ் எப்படி வேறுபடுகிறது என பார்க்கலாம். மெட்டாவெர்ஸ் உலகமும் கிட்டத்தட்ட வெர்ச்சுவல் உலகமே. ஆனால் மெட்டாவெர்ஸ் இன்னும் கொஞ்சம் மனிதனுக்கு நெருக்கமாகி உள்ளது.

இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் டிஜிட்டல் உலகில் வங்கிகள், கல்வி நிறுவனங்கள், ஓட்டல்கள், கடைகள், மருத்துவமனைகள் என்று அனைத்துக்கும் வெப்சைட்டுகள் உள்ளன. மொபைல், ஐபேட், டேப்லெட், லேப்டாப், டெஸ்க்டாப் போன்ற டிஜிட்டல் சாதனங்களுக்கு வெளியே இருந்து கொண்டு, அந்தந்த வெப்சைட்டுகளில் நமக்கான யூசர் நேம், பாஸ்வேர்ட் மூலம் உள்ளே சென்று ஆன்லைனில் அதனதன் பயன்களை அனுபவிக்கின்றோம்.

ஆனால், மெட்டாவெர்ஸ் உலகில் நுழைய நமக்கு ஒரு டிஜிட்டல் டோக்கனும் (NFT), நமக்கான அவதாரமும் (Avatar) தேவை. அந்த டிஜிட்டல் டோக்கன்தான் மெட்டா உலகில் நமக்கான பாஸ்வேர்ட்.

நம்மைப் போலவே 3D வடிவில் வடிவமைக்கப்படும் உருவமே நம் அவதாரம். மெட்டாவெர்ஸ் உலகுக்கான சிறப்பு கண்ணாடிகளும், ஹெட் செட்டுகளையும் அணிந்துகொண்டு மெட்டாவெர்ஸ் உலகிற்கு நாமே நேரடியாகச் சென்று அதனதன் பயன்களை அனுபவிக்க இருக்கிறோம். நமக்கு பதிலாக நம் அவதாரம் (Avatar)



மெட்டா உலகிற்குள் சென்று காரியத்தை சாதித்துக்கொண்டு வரும். ஆம், நிஜ உலகில் நாம் என்ன செய்கிறோமோ, என்ன சொல்கிறோமோ, என்ன நினைக்கிறோமோ அதை நம் அவதாரம் உள்வாங்கிக்கொண்டு அதன்படி செயலாற்றும் வல்லமை பெற்ற கற்பனைக்கும் மிஞ்சிய உலகம்தான் மெட்டாவெர்ஸ் உலகம்.

இப்போதுள்ள சாதாரணமான வெர்ச்சுவல் உலகில் டிஜிட்டல் சாதனங்களுக்கு வெளியே நின்று கொண்டு வெப்சைட்டுகள் மூலம் டிஜிட்டல் உலகில் பயணிக்கிறோம்.

வர இருக்கும் / வந்துகொண்டே இருக்கும் மெட்டாவெர்ஸ் உலகில் டிஜிட்டல் சாதனங்களுக்கு வெளியே நாம் நிற்கப் போவதில்லை. நாமே நம் அவதாரம் மூலம் டிஜிட்டல் உலகுக்குள் நேரடியாகச் செல்ல இருக்கிறோம்.

இதுதான் இரண்டுக்குமான மிக முக்கியமான வித்தியாசம்.

1990–களில் பிரபலமான 'We are Computerised Firm' என்ற பெருமைமிகு வாசகங்களுக்கு நிகராக 'We are MetaVerse Enabled Firm' என்று பெருமையாக சொல்லிக் கொள்ளும் காலம் வந்துகொண்டே இருக்கிறது.

நாமும் அந்த உலகில் இணைந்து செயலாற்றத் தயாராக Ai தொழில்நுட்பத்தை பயன்படுத்த கற்றுக்கொள்ளத் தொடங்குவோம்.

(வரம் தர வரும் Ai)